செ.வெ.எண்: 57 நாள்: 31.08.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மூலம் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயன்பெற மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் அழைப்பு.**

நாகப்பட்டினம் மாவட்ட நிர்வாகம், வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், நாகப்பட்டினம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 5.9.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நாகப்பட்டினம், பாப்பாகோயில், சர் ஐசக் நியூட்டன் பொறியியல் கல்லூரியில் நடைபெற உள்ளது.

வேலைவாய்ப்பு முகாமில் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 18 வயதிலிருந்து 40 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம். 8ம் வகுப்பு தேர்ச்சி, பத்தாம் வகுப்பு, பனிரெண்டாம் வகுப்பு, கலை, அறிவியல், வணிகப் பட்டதாரிகள், ஐ.டி.ஐ., டிப்ளமோ மற்றும் பொறியியல் படித்துள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம். இவ்வேலைவாய்ப்பு முகாமில் தனியார் துறையைச் சார்ந்த பல்வேறு முன்னணி நிறுவனங்கள் கலந்து கொண்டு 5000க்கும் மேற்பட்ட பணிக்காலியிடங்களுக்கான பணியாளர்களைத் தேர்வு செய்ய உள்ளனர்.

இம்முகாமில் கலந்துகொள்ள விருப்பமுள்ள நாகை மாவட்டத்தைச் சார்ந்த வேலைவாய்ப்பற்ற வேலைநாடுநர்கள் www.tnprivatejobs.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களுடைய கல்வித்தகுதி குறித்த விவரங்கள் முன்னரே பதிவு செய்து கொள்ளலாம். முகாம் தொடர்பான கூடுதல் விவரங்கள் அறிய விரும்புபவர்கள் அலுவலக தொலைபேசி எண்ணில் (04365-252701) தொடர்பு கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

இவ்வேலைவாய்ப்பு முகாமின் வாயிலாக தனியார் துறையில் வேலைவாய்ப்புப் பெறும் மனுதாரர்களின் வேலைவாய்ப்பு பதிவு விவரங்கள் ரத்து செய்யப்படமாட்டாது. இம்முகாமில் கலந்துகொள்ள விருப்பமுள்ள மனுதாரர்கள் தங்களின் புகைப்படம், கல்விச் சான்றிதழ்கள், ஆதார் அட்டை, மற்றும் சுயக்குறிப்பு (Bio-Data) ஆகியவற்றின் அசல் மற்றும் நகலுடன் முகாமில் கலந்து கொண்டு பயன்பெற மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் அ.அருண் தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**